**தலைப்பு 25 – எல்லை நிர்ணய ஆணைக்குழு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் இரண்டாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்கள் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் / நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்குகள் தொடர்பான பொறுப்பு**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரமாணத்தின் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தில் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு விடயப் பரப்பு**

தலைப்பு 25 – எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 யூன் 11 ஆந் திகதி ஆணைக்குழுவின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான

செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக எல்லை நிர்ணய ஆணைக்குழுவில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.5 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 மற்றும் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்படத் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 127 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கும் ஏற்பாடுகள் தயாரிக்கும் தாப்பிக்கும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்பட்டுள்தாகவும் வேண்டுமெனவும் | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை | 2.4 |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் அவர் தனது சொந்த நிர்வாக அனுபவத்தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு விடப்படுகின்றதெனவும் | வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படாமை | 2.1 |
| 127(5) | மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு மற்றும் செலவினத்திற்கு இடையே உள்ள கருத்திற் கொள்ளக் கூடியளவு | 1. மிகை நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை | 2.2 |

| | | | |
|---|---|---|---|
| வேறுபாடு அமைச்சினால் நுட்பமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும் | 2. | ஆகக் குறைந்த பெறுவனவு எல்லையை அடையாமை | 2.3 |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

**வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்**

2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 3.1.6 ஆம் பந்தியின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்தி, அந்த அறிக்கைகளை 2018 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், ஆணைக்குழுவினால் அந்த அறிக்கை 2018 யூன் 08 ஆந் திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

**செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளை பயன்படுத்துதல்.**

ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழ் 2017 ஆண்டிற்காக நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்து. அந்நிதிஏற்பாட்டின் பயன்பாடு மற்றும் சேமிப்புக்கள் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 31.64 | 18.96 | 12.68 | 40.08 |
| மூலதனம் | 1.20 | 0.67 | 0.53 | 44.17 |
| மொத்தம் | 32.84 | 19.63 | 13.21 | 40.23 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

07 செலவின விடயங்களுக்காக மொத்தமாக ரூபா 20.83 மில்லியன் மிகை நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையால் அந்த செலவின விடயங்களுக்குரிய நிதிஏற்பாடுகளில் மொத்தம் ரூபா 8.37 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் சேமிப்புக்கள் தேறிய

நிதிஏற்பாட்டின் 37 சதவீதம் 97 முதல் சதவீதம் வரையான வீச்சில் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

ஆணைக்குழுவிற்குரிய 02501 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானது** |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 1.50 | 0.56 | 0.40 | 0.06 | 4.00 | 0.79 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### குறைந்த பெறுவனவு எல்லையை அடையப்படாமை

2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டு சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் 02501 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு செயற்பாட்டிற்குரிய குறைந்த பெறுவனவு எல்லை ரூபா 0.40 மில்லியன் என குறிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி அளவில் சேகரிக்கப்பட்ட பெறுவனவுகளாக ரூபா 0.06 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 0.34 மில்லியனால் பெறுவனவு எல்லை அடையப்பட்டிருக்கவில்லை. 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் 8.1 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து 2018 மே 31 ஆந் திகதிக்கு முன்னர் எல்லையை திருத்தம் செய்வதற்கு முடியுமாக இருந்த போதிலும் ஆணைக்குழு அலுவலகத்தினால் 2018 யூன் 08 ஆந் திகதி வரையிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2.4 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | |
| (அ) நிதிப்பிரமாணம் 137(1) | 3,302,995 | எல்லை நிர்ணய குழு அறிக்கை அச்சீடுசெய்யும் போது விலை விபரங்கள் அங்கீகரிப்பதற்கு முன்னரும் கட்டளை வழங்குவதற்கு முன்னரும் செலவினம் உறுதிப்படுத்தப்பட்டு காசோலை எழுதி கையில் வைத்திருக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) **திறைசேரி சுற்றறிக்கை** | | |
| 2017 நவம்பர் 02 ஆந் திகதிய 04/2017 ஆம் இலக்க சுற்றறிக்கை | | |
| (i) 2.1 ஆம் பந்தி | 233,347 | 2017 திசெம்பர 31 இல் உள்ளவாறு காசேடு சமப்படுத்தப்பட்டு அதன் மீதி 2018 சனவரி 02 ஆந் திகதி திறைசேரிக்கு காசோலை அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் அத்திகதி தாமதிக்கப்பட்டு 2018 சனவரி 16 ஆந் திகதி ஆந் திகதி திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. |
| (ii) 2.4 ஆம் பந்தி | 3,302,995 | 2017 ஆம் ஆண்டின் இறுதியில் காசேடு தீர்ப்பனவு செய்யும் போது கட்டுநிதியின் ஒரு பகுதி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. |

### 2.5 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான, வெற்றிடமான மற்றும் மிகைப் பதவியணி தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக ஆணைக்குழுவினால் ஆளணி வேதன செலவின தொகுதிக்காக ரூபா 10.99 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நபரொருவருக்கான செலவினம் ரூபா 1,098,815 ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 02 | 02 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 02 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 07 | 02 | 05 |
| (iv) | ஆரம்ப நிலை | 04 | 04 | - |
| | அமைய /ஒப்பந்த/ | | | |
| | மொத்தம் | 15 | 10 | 05 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**பதவியணியினரை பயிற்றுவித்தல் போதியதாக இல்லாதிருத்தல்**

---

2017 ஆம் ஆண்டில் பயிற்சியளிப்பதற்காக ரூபா 100,000 நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அதில் ரூபா 33,000 செலவிடப்பட்டு இரண்டு உதகியோகத்தர்கள் மாத்திரம் பயிற்சியளிப்பதற்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம் பதவியணியினருக்கு போதியளவு பயிற்சி வழங்குவதற்கு ஆணைக்குழு அலுவலகத்தினால் திட்டமிடப்பட்டிருக்கவில்லை.